FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.குபா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(குற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED CRIME TRACKING SYSTEM

C 8083833

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No. முத.அ எண் 07/2026 Date: நாள் 02.09.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள் u/s 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 02.09.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 10.00 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.09.2026 Time : நேரம் 15.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02.09.2026 Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In Hand Writting

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 25 Kms / South

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி சாத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக சமூகநலத்துறை அறை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காவ.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.க.தாமரைக்கண்ணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.கருப்பசாமி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 14.10.1998 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Electrician Assistant (g) Address : முகவரி 108B, அண்ணா நகர், சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி.சகுந்தலா, ஊர் நல அலுவலர், சமூகநலத்துறை, சாத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 02.09.2026 மாலை 15.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், சாத்தூர், அண்ணாநகர், கதவு எண்.108B என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.கருப்பசாமி என்பவரின் மகன் திரு.தாமரைக்கண்ணன் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகார்மனுவை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார்மனு தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், வாதிமீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், எதிரிமீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 02.09.2026 மாலை 17.30 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திருமதி.சகுந்தலா, ஊர் நல அலுவலர், சமூகநலத்துறை, சாத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சாத்தூர், விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2026 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
02.09.2026 at 09.15 hrs.

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. RAMANATHAN,
Rank: நிலை INSP & PRINCE.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க.பிரிவு குற்ற எண்.07/2026 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.தாமரைக்கண்ணன் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் K.தாமரைக்கண்ணன், வயது 27, த/பெ.கருப்பசாமி, கதவு எண்.108B, அண்ணாநகர், சாத்தூர், விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்சம் ஒழிப்பு துறை அலுவலகம், விருதுநகர். ஐயா, நான் சாத்தூர் அண்ணாநகரில் அம்மா மற்றும் எனது மனைவியுடன் குடியிருந்து வருகிறேன். நான் பட்டப்படிப்பு முடித்துவிட்டு, எலக்ட்ரீசியனுக்கு உதவியாளராக தினக்கூலி அடிப்படையில் வேலை செய்து வருகிறேன். நான் செட்டியார் சமுதாயத்தை சேர்ந்தவன். ஹோமியோபதி மருத்துவ பட்டப்படிப்பு படித்து முடித்த இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, காக்கூர் கிராமம், தெற்கு தெரு ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த திரு.குருசேகர் என்பவரது மகள் திருமதி.பிரியதர்சினி என்பவரை காதலித்து கடந்த 22.02.2026 அன்று கலப்பு திருமணம் செய்தேன். எங்கள் கலப்பு திருமணத்தை கடந்த 05.03.2026 அன்று சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறையாக பதிவு செய்து 6.04.2026 அன்று கலப்பு திருமணச் சான்றிதழ் பெற்றேன். தமிழக அரசின் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறுவதற்காக அதற்குரிய ஆவணங்களுடன் கடந்த 29.08.2026 அன்று சாத்தூர் தாலுகா அலுவலக வளாகத்திற்குள் இருந்த இ-சேவை மையத்தில் சேவை கட்டணமாக ரூ.120/- கொடுத்து என்னுடைய மனைவி பிரியதர்சினி பெயரில் விண்ணப்பித்தேன். அதற்கு ஒரு ஒப்புகைச்சீட்டு கொடுத்தார்கள். பின்னர், விசாரித்து தெரிந்துகொண்ட தகவலின்பேரில், ஒப்புகைச்சீட்டு, நானும் என்னுடைய மனைவியும் சேர்ந்தவாறு இருக்கும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ-3 எண்ணம், திருமண பத்திரிக்கை அசல்-1 எண்ணம் மற்றும் இணையதள வழியாக சமர்பித்த ஆவணங்களின் இருபிரதி நகல்களுடன் இன்று (02.09.2026) காலை சுமார் 10.00 மணியளவில் சாத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் தரைதளத்திலுள்ள சமூக நல அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த ஊர்நல அலுவலர் திருமதி.சகுந்தலா என்பவரை சந்தித்து, ஒப்புகைச்சீட்டு, நானும் என்னுடைய மனைவியும் சேர்ந்தவாறு இருக்கும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ-3 எண்ணம், திருமண பத்திரிக்கை அசல்-1 எண்ணம் மற்றும் இணையதள வழியாக சமர்பித்த ஆவணங்களின் இருபிரதி நகல்களை கொடுத்து விவரம் கேட்டேன். அப்போது அவர், அவற்றை பெற்று பார்த்துவிட்டு, உங்களுக்குரிய இணையதள ஆவணங்களை எல்லாம் சரிபார்த்துவிட்டேன் நீங்கள் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின்கீழ் பயனாளியாக தகுதிவுடைவர்தான் என்று கூறி, ஒரு நிரப்பப்படாத இத்திட்ட விண்ணப்ப படிவத்தை எடுத்து என்னிடம் கொடுத்து அதில் என்னுடைய கையொப்பத்தையும் என்னுடைய மனைவியின் கையொப்பத்தையும் இடச்சொன்னார். ஆகையால் அவர் சொன்னதுபோல், அந்த விண்ணப்ப படிவத்தில் என்னுடைய கையொப்பத்தையும், என்னுடைய மனைவியின் கையொப்பத்தையும் இட்டேன். மேலும் அவர், நீங்கள் கொடுத்த ஆவணங்களில் திருமண

பத்திரிக்கை அசல்-1 எண்ணம் மற்றும் உங்கள் இரண்டுபேருடைய பட்டப்படிப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல் 2 பிரதிகள் ஆகிய ஆவணங்கள் இல்லாமல் உள்ளது என்றும் ஆகையால் அந்த ஆவணங்களையும் அத்துடன், எனக்கு தனியாக ரூ.2000/- பணமும் கொண்டுவந்து தர வேண்டும் என்று கூறினார். அப்போது நான் அவரிடம், ஆவணங்களை கொண்டுவந்து தருகிறேன் மேடம், ரூ.2000/- பணம் அரசுக்கு செலுத்த வேண்டிய பணமா மேடம் என்று கேட்டேன். அதற்கு அவர், அரசுக்கு செலுத்த வேண்டிய பணமெல்லாம் இல்லப்பா, அலுவலக செலவிற்குரிய பணம்ப்பா என்று சொன்னார். உடனே நான், மேடம் நானே எலக்ட்ரீசியன் உதவியாளராக தினக்கூலி வேலைதான் செய்து பொழப்பு நடத்திட்டு வாரேன் மேடம், ரொம்ப கஷ்டபட்டவன், பணம் இல்லாம முடியாதா மேடம் என்று சொல்லி கேட்டேன். அதற்கு அவர், பணம் இல்லாம முடியாதுப்பா, அரசாங்கம் கொடுக்கிற பணத்த நீங்கதான் அனுபவிக்க போறீங்க என்று கூறி, தினக்கூலி வேலை பாக்கிறேனு நீங்க சொல்றதால, திருமண பத்திரிக்கை அசல்-1 எண்ணம் மற்றும் உங்கள் இரண்டுபேருடைய பட்டப்படிப்பு மதிப்பெண் சான்றிதழ் ஆகியவற்றை கொண்டுவந்து கொடுக்கறப்ப ரூ.1,500/- பணத்தையாவது ரெடி பண்ணி கொண்டுவந்து என்னிடம் கொடுங்க, இந்த ரூ.1,500/- பணத்தை கொண்டுவந்து கொடுத்தால்தான் உங்களை இத்திட்டத்தில் பயனாளியாக்க பரிந்துரை செய்வேன் என்று கராறாக கூறினார். ஊர்நல அலுவலர் திருமதி.சகுந்தலா அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. இருந்தாலும் அவரிடம் அப்போது சரிங்க மேடம், இப்ப 1500/- ரூபா பணம் இல்லை, நாளைக்கு வந்து தாரேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எங்களை டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின்கீழ் பயனாளியாக்க பரிந்துரை செய்ய, என்னிடம் லஞ்சமாக ரூ.1,500/- பணம் கேட்ட சாத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊர்நல அலுவலராக பணிபுரியும் திருமதி.சகுந்தலா என்பவர்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (sd) K.Thamaraikannan 02/09/2026 Sir, Received the complaint on 02.09.2026 at 15.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, DVAC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.7/2026 u/s 7 of the PC Act 1988 as amended in 2018 on 02.09.2026 at 17.30 hrs and took up for investigation. (Sd) (R.BOOMINATHAN) 2/9/2026 Insp/V&AC/VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.